इंडियन बैंक Indian Bank

इलाहाबाद ALLAHABAD

(Corporate Office No. 254-260 Avvai Shanmugam Salai Wing 2-C Royapettah, Chennai 600 014, India)

31 மார்ச் 2026 நிலவியபடி இருப்புநிலைக் குறிப்பு

(ரூபாய் ஆயிரத்தில்)

	31.03.2026 நிலவியபடி	31.03.2025 நிலவியபடி
மூலதனமும் பொறுப்புகளும்		
மூலதனம்	1346 96 40	1346 96 40
காப்புநிதியும் உபரியும்	76944 29 46	67962 97 67
வைப்புத் தொகைகள்	827726 30 15	737153 56 39
வாங்கிய கடன்	46692 49 50	41507 92 45
இதர பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்	35242 77 84	25439 23 21
மொத்தம்	**987952 83 35**	**873410 66 12**
சொத்துகள்		
RBI-ல் உள்ள ரொக்கமும் இருப்புகளும்	34054 56 08	31947 64 88
வங்கிகளிலுள்ள இருப்பும் கேட்டவுடன் மற்றும் குறுகிய அறிவிப்பில் உள்ள பணமும்	31535 63 36	22920 22 73
முதலீடுகள்	244665 74 32	225303 12 38
முன்பணங்கள்	654888 22 55	571071 19 09
நிலையான சொத்துகள்	8646 70 07	8826 69 30
இதர சொத்துகள்	14161 96 97	13341 77 74
மொத்தம்	**987952 83 35**	**873410 66 12**
சார்புநிலைப் பொறுப்புகள்	255946 91 17	280676 21 35
வசூலுக்கான உண்டியல்கள்	10282 55 01	14159 47 18
மூலதன நிறைவு விகிதங்கள் (%) பேசல் III		
பிரிவு I மூலதனம்	16.40	15.36
உபரி பிரிவு I	0.00	0.49
பிரிவு II மூலதனம்	1.53	2.09
மொத்தம்	**17.93**	**17.94**
பங்குரிமை விகிதம் - இந்திய அரசாங்கம்	74%	74%

31 மார்ச் 2026 முடிவுற்ற ஆண்டுக்குரிய லாப நட்டக் கணக்கு

(ரூபாய் ஆயிரத்தில்)

	31.03.2026 முடிவுற்றது	31.03.2025 முடிவுற்றது
I. வருமானம்		
ஈட்டப்பட்ட வட்டி	67450 71 38	62002 15 80
இதர வருமானம்	9990 58 10	9223 48 10
மொத்தம்	**77441 29 48**	**71225 63 90**
II. செலவினம்		
வட்டிச் செலவு	40535 78 74	36825 78 82
நடைமுறை செலவினம்	16989 40 25	15401 64 46
ஒதுக்கீடுகளும் சார்புநிலைப் பொறுப்புகளும்	7760 45 85	8079 91 22
மொத்தம்	**65285 64 84**	**60307 34 50**
III. இலாபம்/நட்டம்		
ஆண்டுக்கான நிகர இலாபம்/நட்டம்(-)	12155 64 64	10918 29 40
முன்கொண்டுவரப்பட்ட இலாபம்/நட்டம்(-)	352 40 01	329 34 23
மொத்தம்	**12508 04 65**	**11247 63 63**
IV. ஒதுக்கீடுகள்		
இவற்றுக்கு மாற்றம்:		
சட்டப்பூர்வ காப்புநிதிகள்	3038 92 00	2729 58 00
மூலதனக் காப்புநிதிகள்	42 56 21	29 19
சிறப்பு காப்புநிதிகள் IT சட்டம் பிரிவு 36 (1)(viii)-ன் கீழ்	504 19 00	467 34 00
மூலதன ஏற்ற இறக்க காப்புநிதிகள்	-	199 20 78
வருமானக் காப்புநிதிகள்	6050 00 00	5250 00 00
ஊழியர் நல நிதி	50 00 00	60 00 00
பங்கு ஈவுத்தொகை	2458 20 93	2188 81 65
இருப்புநிலைக் குறிப்பில் சேர்க்கப்பட்ட இருப்புகள்	364 16 51	352 40 01
மொத்தம்	**12508 04 65**	**11247 63 63**
பங்கு ஒன்றின் வருமானம் ரூபாயில் (அடிப்படை & ரொக்கம்)	90.24	81.06

வங்கி கலைப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டால், கலைப்பு அல்லது அதற்கு நிகரான நடவடிக்கைகள் வங்கியில் மேற்கொள்ளப்பட்டால், வைப்புத் தொகைகளைத் திருப்பி வழங்குவதில் எங்கள் தலைமை அலுவலகம் வங்கியின் வெளிநாட்டு கிளைகளின் வைப்புதாரர்களுக்குத் தாய்நாட்டு வைப்புதாரர்களைவிடக் குறைந்த முன்னுரிமை வழங்கவேண்டும் என எங்கள் தாய் நாடு- இந்தியா நிபந்தனை விதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

சுயேச்சையான தணிக்கையாளரின் அறிக்கை

இந்திய வங்கி உறுப்பினர்களுக்கு

தனித்த நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கை அறிக்கை

கருத்து

1. நாங்கள் இங்குத் தரப்பட்டுள்ள இந்தியன் பேங்கின் ("வங்கி") 2026 மார்ச் 31-ம் தேதி இருப்புநிலைக் குறிப்பு, அதே தேதியில் முடிவுற்ற லாப நட்டக் கணக்கு, ரொக்கப் புழக்க அறிக்கை, மற்றும் குறிப்பிடத்தக்கக் கணக்கு கொள்கைகள், இதர விளக்கக் குறிப்புகளின் சுருக்கம் உட்பட ஆண்டுக்கான தனித்த நிதிநிலை அறிக்கைகளை தணிக்கை செய்தோம்:

i. கார்ப்பரேட் அலுவலகம் மற்றும் அதன் துறைகள், கருவூலக் கிளை, GIFT City கிளை மற்றும் எங்களால் தணிக்கை செய்யப்பட்ட 20 இந்தியக் கிளைகள்;

ii. இந்தியக் கிளைகளும் அலுவலகங்களும் 2103 அந்தந்த சட்டப்பூர்வ கிளை தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டது; மற்றும்

iii. வெளிநாட்டு 3 கிளைகள் அந்தந்த உள்ளூர் தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்டன;

எங்களால் தணிக்கை செய்யப்பட்ட இந்திய கிளைகளும், பிற தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்பட்ட இந்திய கிளைகளும் ரிசர்வ் வங்கி ஆப் பேங் இந்தியா (RBI)-ன் வழிகாட்டுதல்களின்படி வங்கியால் தேர்ந்தெடுக்கப்பட்டன. மேலும், இருப்புநிலைக் குறிப்பில், தணிக்கைக்கு உட்படுத்தப்படாத 4444 இந்திய கிளைகள்/அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட லாப நட்டக் கணக்கு அறிக்கையும் பணப்புழக்க அறிக்கையும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த தணிக்கை செய்யப்படாத கிளைகளின் முன் பணங்கள் 21.69%, வைப்பு தொகைகள் 48.01%, வட்டி வருமானம் 17.25% மற்றும் வட்டி செலவுகள் 42.71% ஆக இருந்தன.

2. எங்கள் கருத்து, எங்களுக்குக் கிடைத்த தகவல்கள், தரப்பட்ட விளக்கங்களின்படி, மேற்கூறிய தனித்த நிதிநிலை அறிக்கைகள் வங்கி ஒழுங்குமுறைச் சட்டம், 1949-ல் தேவைப்படும் தகவல்களை வங்கிக்கு தேவைப்படும் விதத்தில் வழங்குவதுடன் இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கும் இணக்கமாக உள்ளன, மற்றும்:

a. இருப்புநிலைக் குறிப்பு அதனுடைய குறிப்புகளுடன் தேவையான அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான மற்றும் நியாயமான 2026 மார்ச் 31ஆம் தேதி நிலவரப்படி வங்கியின் விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வெளிப்படுத்தும் வகையில் முறையாக வரையப்பட்டுள்ளது;

b. லாப நட்டக் கணக்கு அதன் குறிப்புகளுடன் உண்மையான லாப நிலையை சரியாகக் காட்டுகிறது; மற்றும்

c. பணப்புழக்க அறிக்கை அந்த தேதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணப்புழக்கங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை வழங்குகிறது.

இதர விவகாரங்கள்

3. வங்கியின் தனித்த நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள 2,106 கிளைகளின் (3 வெளிநாட்டு கிளைகள் உட்பட) தனித்த நிதிநிலை அறிக்கைகள்/தகவல்களை நாங்கள் தணிக்கை செய்யவில்லை. இவற்றின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள்/தகவல்கள் 2026 மார்ச் 31-ஆம் தேதி நிலவரப்படி மொத்த சொத்துகள் Rs. 3,54,715.47 கோடிகள், அதே தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்த வருமானம் Rs.23,472.95 கோடிகள் ஆகும். இந்த கிளைகளின் முன்பணங்கள் 43.93%, வைப்புத் தொகைகள் 44.50% மற்றும் செயல்படா சொத்துகள் 53.28% ஆகவும் 2026 மார்ச் 31-ம் தேதி முடிவுற்ற நிதி ஆண்டின் வருமானம் 30.31% ஆகவும் இருந்தன. இந்தக் கிளைகளின் நிதிநிலை அறிக்கைகள்/தகவல்களை கிளை தணிக்கையாளர்கள் தணிக்கை செய்தனர். அவர்களின் அறிக்கைகள் எங்களிடம் வழங்கப்பட்டன. இந்தக் கிளைகளின் தொடர்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகள் மற்றும் வெளிப்பாடுகளைப் பற்றிய எங்களுடைய கருத்து முற்றிலும் சம்பந்தப்பட்ட கிளை தணிக்கையாளர்களின் கருத்துகளின் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது.

மேற்கண்ட விசயங்கள் சார்ந்த எங்களது அபிப்பிராயம் மாற்றப்படவில்லை.

தனித்த நிதிநிலை அறிக்கைகளுக்கான பொறுப்புதாரிகள் மற்றும் நிர்வாகத்தினரின் பொறுப்புகள்

4. இந்த தனித்த நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பது வங்கி இயக்குநர்கள் சபையின் பொறுப்பாகும். வங்கியின் நிதிநிலை நிலவரம், நிதிநிலை செயல்பாடு மற்றும் ரொக்கப் புழக்க அறிக்கை இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்கவும், ICAI வெளியிட்ட கணக்கியல் தரங்களுக்கு இணங்கவும், வங்கி விதிமுறை சட்டம் 1949 பிரிவு 29-க்கு இணங்கவும், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அவ்வப்போது வெளியிடும் சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு இணங்கவும் வங்கியின் நிதிநிலைமையை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் தயாரிக்க வேண்டியது இயக்குநர்கள் சபையாகும்.

தனித்த நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளர்களின் பொறுப்புகள்

5. முழு தனித்த நிதிநிலை அறிக்கைகளில், மோசடி அல்லது பிழையால், முக்கிய விவரப் பிழைகள் இல்லாதிருக்கிறதா என்பதற்கு நியாயமான உறுதிப் பெற்று, எங்கள் கருத்தை உள்ளடக்கும் தணிக்கையாளர்களின் அறிக்கையை வெளியிடுவதே எங்கள் இலக்கு. மேலும் நாங்கள்:

i பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் பொருத்தத்தையும், நிர்வாகம் செய்த கணக்கியல் உத்தேசங்கள் மற்றும் அது தொடர்பான வெளிப்பாடுகள் ஆகியவற்றின் நியாயத் தன்மையையும் மதிப்பிடுகிறோம்.

ii தொடர்ந்து செயல்படக்கூடிய கணக்கியல் அடிப்படையை நிர்வாகம் பயன்படுத்தியது பொருத்தமானதா என்பது பற்றி தீர்மானிக்கவேண்டும். அதோடு, பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில், வங்கி தொடர்ந்து செயல்படக்கூடிய நிறுவனமாகத் தொடரக்கூடிய ஆற்றல் குறித்துக் குறிப்பிடத்தக்க ஐயம் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் தொடர்பான விவர நிச்சயமின்மை இருக்கிறதா என்பதைத் தீர்மானிக்கவேண்டும். விவர நிச்சயமின்மை இருப்பதாக நாங்கள் தீர்மானித்தால், தனித்த நிதிநிலை அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள அது தொடர்பான வெளிப்பாடுகள் குறித்து எங்கள் தணிக்கையாளர்களின் அறிக்கையில் கவனத்தை ஈர்க்கவேண்டும், அல்லது இந்த வெளிப்பாடுகள் போதுமானவையாக இல்லாவிட்டால், எங்கள் கருத்தைத் திருத்தியமைக்க வேண்டும். எங்களது தீர்மானங்கள், தணிக்கையாளர்களின் அறிக்கை தேதி வரை பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையிலானவை. ஆயினும், வருங்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள், வங்கி தொடர்ந்து செயல்படக்கூடிய ஆற்றலை இழப்பதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

சட்டப்பூர்வ முதன்மை கணக்காய்வாளர்கள்

G BALU ASSOCIATES LLP
DASS GUPTA & ASSOCIATES
ARUN K AGARWAL & ASSOCIATES
SPARK & ASSOCIATES CHARTERED ACCOUNTANTS LLP
BHATIA & BHATIA

இயக்குநர்கள் சபை

BINOD KUMAR	MANAGING DIRECTOR & CEO
MINI T M	EXECUTIVE DIRECTOR
BRAJESH KUMAR SINGH	EXECUTIVE DIRECTOR
SHIV BAJRANG SINGH	EXECUTIVE DIRECTOR
ASHUTOSH CHOUDHURY	EXECUTIVE DIRECTOR
ALOK PANDE	GOVT. NOMINEE DIRECTOR
K NIKHILA	RBI NOMINEE DIRECTOR
SANJEEV MAHESHWARI	SHAREHOLDER DIRECTOR
BHUPINDER SINGH BHALLA	SHAREHOLDER DIRECTOR

பொது மேலாளர்-CFO
இடம்: சென்னை
தேதி: 29.04.2026

இந்த வங்கியின் நிதிநிலை அறிக்கைகளின் முக்கிய பகுதிகளான குறிப்புகளையும் அட்டவணைகளையும் மேற்கண்ட அறிக்கைகளுடன் சேர்த்து வாசித்து முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டும். இவற்றை வங்கியின் ஆண்டறிக்கையில் காணலாம். இவற்றின் பிரதிகளைக் கீழ்க்கண்ட முகவரியில் கேட்டுப்பெறலாம்:

Chief Executive
Indian Bank, 3 Raffles Place, Bharat Building, Singapore 048617